DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No. CC- 370/2009 |
| | | Prosecution PW--2 |
| Deposition of witness for | { | |
| Name | : | Ramasamy |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2018

**மு.வி.**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் பாவூர்சத்திர காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது கடந்த 30.10.2006ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு பாவூர்சத்திர காவல் நிலைய ஆய்வாளர் தலைமையில், உதவி ஆய்வாளர், தலைமைகாவலர் 847 தலைமைக்காவலர் 17000 அவர்களுடன் நானும் வடக்கு சிவகாமிபுரம் வழிக்கு செல்லும் கீழ்புறம் கீழப்பாவூர் அர்ச்சுனன் சொந்தமான ரைஸ் மில்லுக்கு வடபுறம் இருந்து நாங்கள் கவனித்துக்கொண்டிருக்கும் போது JAO-1 6447 என்ற எண்ணுள்ள டேங்கர் லாரியிலிருந்து பிளாஸ்டிக் டியூப் மூலம் பிளாஸ்டிக் பெராரில் பிடித்துவிட்டு அந்த லாரியை அகற்றி அடுத்த இடத்தில் வைத்துவிட்டு அதே இடத்தில் TN-76 9933 என்று எண்ணுள்ள டேங்கர் லாரியை நிறுத்தி அதிலிருந்து பிளாஸ்டிக் டியூப் மூலம் பிளாஸ்டிக் பெராரில் பிடித்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் போலிஸ் பார்ட்டி மூலம் JAO-1 6447 என்ற எண்ணுள்ள லாரியில் டிரைவர் ஈஸ்வரன் என்றும், கிளீனர் தங்கராஜ் என்றும், TN-76 9933 என்று எண்ணுள்ள லாரியில் டிரைவர் காளிதாஸ் என்றும், கிளீனர் நாராயணன் என்றும், ஆயில்யை வாங்கி

வைத்துக்கொண்டிருந்தவா் செல்லதுரை என்றும் சொன்னார்கள்.டேங்கா் லாரியில் இருந்து கழிவுகளை வாங்கி விற்பதாக சொன்னார்கள். சம்பவ இடத்தில் மேற்படி சோதனை செய்து டேங்கா் லாரியிலிருந்து பிளாஸ்டிக் கேன்களில் பிடித்து வைத்தது பாஸ்பிரிக் ஆயில் என்றும், அதே சிவகாசி ஜோசப் என்பவருக்கு வாங்கி வைப்பதாகவும். ஒவ்வொரு டேங்கா் லாரியிலிருந்து 100கிலோ பாஸ்பிரிக் ஆயில்லை பிளாஸ்டிக் கேன்களில் பிடித்தக்கொண்டும், லாரி டிரைவரிகளிடம் ரூபாய் 300 கொடுத்தாகவும் செல்லத்துரை என்பவா் சொன்னாா. மேற்படி டிரைவா்கள் இருவரும், தலா மூன்னூறு ரூபாயை பாஸ்பிரிக் ஆயில்யை விற்பனை செய்தற்காக பெற்றுக்கொண்டதாக சொன்னார்கள். மேற்படி டேங்கா் லாரியிலிருந்து திருட்டு தனமாக மோசடி செய்து பாஸ்பரிக் ஆயில்யை விற்றதற்காக 5 பேரையும் கைது செய்து அவா்கள் ஆஜா் செய்த பணத்தை அத்தாட்சி மூலம் கைப்பற்றவற்கு அத்தாட்சி தயாா்செய்யப்பட்டது. அத்தாட்சியில் யாரும் கையெழுத்து செய்ய முன்வரவில்லை என்பதால் போலிஸ் பாா்ட்டியாகி நானே அதில் கையெழுத்து செய்தேன். அந்த அத்தாட்சியிலுள்ள கையொப்பம் அ.சா.ஆ.2. அதே தினம் 02.00 மணிக்கு செல்லத்துரை என்பவா் ஓப்புதல் வாக்குமூலம கொடுத்தாா். அதே தினம் 02.30 மணிக்கு ஈஸ்வரன் என்பவா் ஒரு ஓப்புதல் வாக்குமூலம் கொடுத்தாா். அதே தினம் 03.00 மணிக்கு அவா்கள் ஆஜா் செய்த தலா 300 ரூபாயை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றப்பட்டது. எதிரிகள் சகிதம் நிலையம் கொண்டு வந்து நிலையக்குற்ற எண் 276-2006 இதச பிரிவுகள் 408, 388 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளேன். மாதிரிக்கு 4 பாட்டில்களை பாஸ்பிரிக் ஆயில்யை எடுத்து சீல் வைக்கப்பட்டது. மற்ற சொத்துக்களையும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டது. என்னை ஆய்வாளா் அவா்கள் விசாரித்தாா்கள்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No. CC- 370/2009 |
| | | Prosecution PW-- 3 |
| Deposition of witness for | { | |
| Name | : | Arichandren |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.11.2018

**மு.வி.**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரி செல்லத்துரை என்பவரை எனக்குதெரியாது. வழக்கு விபரம் எதுவும் எனக்க தெரியாது. நான் வாடகைக்கு எதுவும் கொடுக்கவில்லை. போலிசார்சம்மன் அளித்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.